**சுருக்கம்**

சுயஉதவிக் குழுக்கள் பயிற்சி **–2010–11** – சுய உதவிக் குழுக்களுக்கான திறன் வளர்ச்சிப் பயிற்சி – இளைஞர் திறன் வளர்ச்சிப் பயிற்சி – ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்துதல் – சமுதாய வள பயிற்றுநர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி, தகவல், கல்வி மற்றும் தொடர்பு சாதனங்கள் பயிற்சி கையேடுகள் தயாரித்தல், தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (டி.என்.வி.ஆர்.சி) மூலம் பயிற்சிகள் நடத்துதல் மற்றும் திட்ட நிர்வாக பிரிவு, திட்ட அமலாக்க பிரிவு மற்றும் வட்டார அளவிலான பணியாளர்களுக்கு திறன் வளர்ச்சிப் பயிற்சி – ஆகிய பயிற்சிகள் அளிக்க – அனுமதித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் ( மஅதி 3) துறை

அரசாணை (நிலை) எண்.53

நாள்: 20.05.2010.
திருவள்ளுவர் ஆண்டு 2041
வைகாசி – 6
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை ) எண்.88, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–3) துறை, நாள் 05.08.2009
2. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநரது நேர்முகக் கடித எண். 1234/இ1/2010, நாள் 6.5.2010.

********

ஆணை:-

படிக்கப்பட்டவை ஒன்றில் உள்ள அரசாணையில் சுய உதவிக்குழுக்களுக்கான பயிற்சி, இளைஞர் திறன் வளர்ச்சிப் பயிற்சி, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்துதல், சமுதாய வள பயிற்றுநர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி, தகவல், கல்வி மற்றும் தொடர்பு சாதனங்கள் பயிற்சி கையேடுகள் தயாரித்தல், தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (டி.என்.வி.ஆர்.சி) மூலம் பயிற்சிகள் நடத்துதல் மற்றும் திட்ட நிர்வாக பிரிவு, திட்ட அமலாக்க பிரிவு மற்றும் வட்டார அளவிலான பணியாளர்களுக்கு திறன் வளர்ச்சி பயிற்சி, போன்ற பயிற்சிகளை அளிக்க அனுமதித்து 2009–2010–ம் ஆண்டிற்கான நிதி விடுவித்து ஆணையிடப்பட்டது.

2. படிக்கப்பட்டவை இரண்டில் உள்ள கடிதத்தில், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் நிறுவனத்தின் முக்கிய நோக்கம், ஏழை மகளிரை சுய உதவிக் குழு என்ற அமைப்பின் கீழ் கொணர்ந்து அவர்களுக்கு அதிகாரப் பகிர்வு அளிப்பதன் மூலம் அவர்களின் சமூக பொருளாதார நிலையினை மேம்படுத்துவதாகும் என்றும், 1989 ஆம் ஆண்டு முதல் மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மகளிர் குழுக்களுக்கு முறையான பயிற்சி அளித்து வருகிறது எனவும், ஏழை மகளிருக்குத் தேவையான திறன் வளர்ப்புப் பயிற்சியை அளிப்பது அவசியமாகிறது எனவும், இம்முறையான திறன் வளர்ப்புப் பயிற்சி மகளிரின் மனதில் ஏற்படுத்திய தெளிவான மாற்றம் தான் மகளிர் சுய உதவிக் குழுக்கள் அடைந்த இந்த வெற்றிக்கு காரணமாகும். தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர், இந்த நிதியாண்டிற்கு (2010–2011) கீழே

குறிப்பிட்டுள்ள பயிற்சி வகுப்புகளை அதற்கெதிரே குறிப்பிட்டுள்ள மொத்த செலவினத் தொகையின்படி நடத்துவதற்கு உத்தேசித்துள்ளதாகவும் அதற்கு அரசின் அனுமதி கோரி கருத்துரு அனுப்பியுள்ளார்.

<u>2010–11 ஆம் ஆண்டின் திறன் வளர்த்தல் மற்றும் இளைஞர்களுக்கான தொழிற் பயிற்சி</u>

| வ.எண் | விபரம் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | **திறன் வளர்த்தல்** | |
| | 1.1) குழு உறுப்பினர் பயிற்சி | 22,10,00,000 |
| | 1.2) ஊக்குநர் மற்றும் பிரதிநிதி பயிற்சி | 4,05,00,000 |
| | 1.3) மகளிர் தொழிற் திறன் மேம்பாட்டு பயிற்சி | 2,00,00,000 |
| 2 | இளைஞர்களுக்கான தொழிற் பயிற்சி | 20,00,00,000 |
| 3 | சமுதாய வள பயிற்றுநர்களுக்கு புத்தாக்க பயிற்சி | 60,00,000 |
| 4 | **ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்துதல்** | |
| | 4.1 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கான நிர்வாகப் பயிற்சி | 1,51,20,000 |
| | 4.2 கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கான மேம்பட்ட நிதி மேலாண்மை பயிற்சி | 1,89,00,000 |
| | 4.3 குடியிருப்பு அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கான நிர்வாக பயிற்சி | 22,96,350 |
| | 4.4 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு தொழில் வாய்ப்புகளை கண்டறிதல் மற்றும் பட்டறிவுப் பயணம் பயிற்சி | 1,50,00,000 |
| | 4.5 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு – துணைக் குழு உறுப்பினர்களுக்கான புத்தறிவுப் பயிற்சி | 45,92,700 |
| | 4.6 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு – சமூக தணிக்கைகுழு உறுப்பினர்களுக்கான புத்தறிவுப் பயிற்சி | 19,13,625 |
| | 4.7 தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கான புத்தறிவுப் பயிற்சி | 33,50,000 |
| 5. | தகவல், கல்வி மற்றும் தொடர்பு சாதனங்கள் – பயிற்சிகையேடுகள் தயாரித்தல் | 50,00,000 |
| 6. | தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (டி.என்.வி.ஆர்.சி) | 40,00,000 |
| 7. | திட்ட நிர்வாக பிரிவு, திட்ட அமுலாக்க பிரிவு மற்றும் வட்டார அளவிலான பணியாளர்களுக்கு திறன் வளர்த்தல் பயிற்சி | 50,00,000 |
| | **மொத்தம்** | **56,26,72,675** |

**3.** சுய உதவிக் குழுக்களுக்கு அளிக்கப்படும் பயிற்சிகள் மற்றும் அதற்காகும் செலவு ஆகியவை கீழே விவரிக்கப்பட்டுள்ளன:-

**1. திறன் வளர்த்தல் :**

மகளிரின் அறிவு, திறன் மற்றும் செயல்பாட்டினை, திறன் வளர்த்தல் பயிற்சி வலுப்படுத்துகிறது. இதனால் தனி நபர் பயன் அடைவது மட்டும் அல்லாமல் குழுக்களின் ஒற்றுமையையும் அவர்களின் உறுதியான செயல்பாடுகளுக்கும் வழி வகுக்கிறது. சுய உதவிக் குழுக்கள் ஆரம்பித்த **6** மாதங்களுக்குள் சுய உதவிக்குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கு அளிக்கப்படும் முறையான பயிற்சிகள் மூலம் இதனை சாதிக்க முடிகிறது.

சுய உதவிக் குழுக்கள் ஒற்றுமையுடன் திறம்பட செயல்படுவதற்கு, அக்குழுக்களின் திறன்கள் மேம்படுத்தப்பட வேண்டும். ஆகையால், குழு ஆரம்பித்து **6** மாத காலத்திற்குள் குழுக்களின் அடிப்படைப் பயிற்சிகளான, குழு உறுப்பினர் பயிற்சி, ஊக்குநர் மற்றும் பிரதிநிதி பயிற்சி ஆகியவை முறையாக அளிக்கப்படுகிறன்றன.

**2010–11** ஆம் நிதி ஆண்டின் வரவு செலவு திட்டம் தாக்கல் செய்தபோது புதிதாக **50,000** சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி புதிதாக உருவாக்கப்பட உள்ள **50,000** சுய உதவிக் குழுக்களும், திறன் வளர்ப்புப் பயிற்சியின் மூலம் வலுவூட்டப்படும்.

மேலும் அரசாணை (நிலை) எண்.**155**, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி**3**) துறை நாள் **5.9.2007**–ன்படி அரசு சுய உதவிக்குழு உறுப்பினர் பயிற்சி மற்றும் ஊக்குநர் மற்றும் பிரதிநிதி பயிற்சி ஆகியவைகளுக்கு பின்வருமாறு பயிற்சித் தொகை நிர்ணயித்து உத்தரவிட்டுள்ளது.

| வரிசை எண். | பயிற்சி | பாடத்திட்டம் / நாள் | ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு வழங்கப்படும் பயிற்சித் தொகை (ரூபாய்) | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | குழுவின் தொகை | பயிற்சியாளர் தொகை | போக்குவரத்து மற்றும் பிற செலவுகள் | மொத்தத் தொகை |
| **1.** | குழு உறுப்பினர் பயிற்சி | 4 நாட்களில் 4 பாடத்திட்டங்கள் | **45.00** | **7.50** | **12.50** | **65.00** |
| **2.** | ஊக்குநர் மற்றும் பிரதிநிதி பயிற்சி | 6 நாட்களில் 3 பாடத்திட்டங்கள் | **45.00** | **10.00** | **12.50** | **67.50** |

**1.1 குழு உறுப்பினர் பயிற்சி :**

அனைத்து சுய உதவிக் குழு உறுப்பினர்களின் திறன் மற்றும் ஆற்றலை வெளிக்கொணர்வதே இந்தப் பயிற்சியின் நோக்கமாகும். அனைத்து சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கும் இந்த அடிப்படை பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியில் பங்கேற்ற ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் பயிற்சித் தொகை வழங்கப்படுகிறது. குழு அமைக்கப்பட்ட உடனேயே

இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. குழுவின் அனைத்து உறுப்பினர்களுக்கும் 4 பாடத் திட்டங்களை உள்ளடக்கி இப்பயிற்சி 4 நாட்களுக்கு அளிக்கப்படுகின்றது.

2010–11 ஆம் நிதி ஆண்டில் புதிதாக உருவாக்கப்பட உள்ள 50,000 புதிய குழுக்களுக்கு ரூ.22,10,00,000 (ரூபாய் இருபத்திரண்டு கோடியே பத்து லட்சம் மட்டும்) மதிப்பீட்டில் உறுப்பினர் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

<u>செலவின மதிப்பீடு :</u>

50,000 குழுக்கள் X ஒரு குழுவிற்கு 17 உறுப்பினர்கள் X 4 நாட்கள் X ரூ. 65/– நாள் ஒன்றுக்கு
= ரூ. 22,10,00,000/–

**1.2 ஊக்குநர் மற்றும் பிரதிநிதி பயிற்சி :**

சுய உதவிக்குழு நிர்வாகிகளான ஊக்குநர் மற்றும் பிரதிநிதி ஆகியோருக்கு குழுவை வழி நடத்தி செல்லும் தலைமைப் பண்பு, குழுவாகச் செயல்படும் திறன் மற்றும் பதிவேடுகளை பராமரிக்கும் திறன் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுவதே இப்பயிற்சியின் நோக்கமாகும். ஒவ்வொரு குழுவிலிருந்தும் 2 பேர் வீதம் அனைத்து குழுக்களின் ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. குழு அமைக்கப்பட்ட உடனேயே இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. குழுவின் அனைத்து ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கும் இப்பயிற்சி 6 நாட்களில் 3 பாடத் திட்டங்களாக அளிக்கப்படுகின்றது. 2010–11 ஆம் நிதி ஆண்டில் புதிதாக உருவாக்கப்பட உள்ள 50,000 புதிய குழுக்களுக்கு ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கு தலைமைப் பண்பு, குழுவாகச் செயல்படும் திறன், சிறந்த தகவல் தொடர்பு மற்றும் பிரச்சனைகளுக்குரிய தீர்வு காண்பது ஆகிய பண்புகளை மேம்படுத்தும் வகையில் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2010–11 ஆம் நிதி ஆண்டில் புதிதாக உருவாக்கப்பட உள்ள 50,000 புதிய குழுக்களுக்கு ரூ.4,05,00,000/– (ரூபாய் நான்கு கோடியே ஐந்து லட்சம் மட்டும்) மதிப்பீட்டில் ஊக்குநர் மற்றும் பிரதிநிதி பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**செலவின மதிப்பீடு:**

50,000 குழுக்கள் X ஒரு குழுவிற்கு 2 நபர்கள் X 6 நாட்கள் X ரூ. 67.50/– நாள் ஒன்றுக்கு =
ரூ. 4,05,00,000/–

**1.3 மகளிர் தொழிற் திறன் மேம்பாட்டுப் பயிற்சி :**

மகளிர் தொழிற்திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டத்தின் கீழ் குறைந்த பட்சம் ஒரு மாத கால அளவில் 35 வயது வரம்புள்ள சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு குறிப்பாக நகர்ப்புற குழு உறுப்பினர்கள் அவர்கள் தேர்ந்தெடுக்கும் தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. வருவாயைப் பெருக்கும் தொழிலைத் தேர்வு செய்து அதன் மூலம் சமூகப் பொருளாதார நிலையில் உயர்வதற்கு இப்பயிற்சி உதவுகிறது. இப்பயிற்சி சிறந்த நிறுவனங்களின் மூலம் கொடுக்கப்படுவதால் சுய உதவிக் குழு மகளிரின் வருவாயை பெருக்குவதற்கு இது பெரிதும் உதவியாக உள்ளது.

2010–11 ஆம் நிதிஆண்டில் 4,000 மகளிருக்கு ரூ.5,000/– வீதம் மகளிர் தொழில் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தேர்வு செய்யப்பட்ட தொழிலுக்கு தகுந்தவாறும் மற்றும் பயிற்சிக்கான கால வரம்புக்கு ஏற்பவும் பயிற்சித் தொகை வேறுபடுகின்றது. தேர்வு செய்யப்பட்ட தொழிலும், மற்றும் நிறுவனமும் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட குழு மூலம் தீர்மானிக்கப்படுகிறது.

**2010–2011** ஆம் நிதி ஆண்டில் ரூ.**2,00,00,000/–** (ரூபாய் இரண்டு கோடி மட்டும்) மதிப்பீட்டில் மகளிர் தொழில் திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**செலவின மதிப்பீடு :**

**4,000** சுயஉதவிக்குழு மகளிர் X ரூ.**5,000/–** (சராசரித் தொகை) = ரூ. **2,00,00,000/–**

**2. இளைஞர்களுக்கான தொழிற் பயிற்சி :**

தொழில் வளர்ச்சியின் காரணமாக உற்பத்தி மற்றும் சேவை துறைகளில் தொழிற்திறன் பெற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் அதிகரித்து தரும் வகையில் இளைஞர்களுக்கான தொழில் திறன் பயிற்சி வழங்கப்படுவதால் வேலையற்ற இளைஞர்களுக்கும், சமுதாயத்திற்கும் பயனுள்ளதாக அமைகிறது. இதனைக் கருத்தில் கொண்டு இந்நிறுவனம் சிறந்த தொழிற்கூடம் மற்றும் சிறந்த பயிற்சி நிறுவனங்களின் மூலம், **2006–07** ல் இருந்து இந்த தொழிற் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**2010–11** ஆம் நிதி ஆண்டில் **25,000** இளைஞர்களுக்கு சராசரியாக ஒருவருக்கு ரூ.**8,000/–** வீதம் ரூ.**20.00** கோடி (ரூபாய் இருபது கோடி மட்டும்) மதிப்பீட்டில் தொழிற்பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**செலவின மதிப்பீடு :**

**25,000** இளைஞர்கள் X ரூ.**8,000/–** (சராசரித் தொகை) = ரூ. **20,00,00,000/–**

**3. சமுதாய வள பயிற்றுநர்களுக்கு புத்தாக்க பயிற்சி :**

சுய உதவிக் குழு இயக்கத்தைத் தன்னிறைவு அடையச் செய்வதற்கும் மேலும் அதை ஒரு சமுதாய அமைப்பாக உருவாக்குவதற்கும் **5,000** சமுதாய வள பயிற்றுனர்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்களிடமிருந்தே உருவாக்கப்படுகிறார்கள். இச்சமுதாய வள பயிற்றுனர்கள், சுய உதவிக்குழுக்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் சமுதாயம் சார்ந்த நிறுவனங்களுக்கு தொடர்ந்து உதவிக்கரம் அளித்து வருகின்றனர். இப்பயிற்றுனர்களை தகவல் தொடர்பு மற்றும் கல்விக்கு உரிய அரசின் பிற திட்டங்களுக்கு இவர்கள் சிறப்புக் கருவியாக பயன்படுத்தப்படுகிறார்கள். மேலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் உள்ள சமூகத் தணிக்கைக் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்கவும் இவர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள்.

**2010–11** ஆம் நிதிஆண்டில் **5,000** சமுதாய வள பயிற்றுநர்களுக்கு ரூ.**60.00** இலட்சம் (ரூபாய் அறுபது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்கு பெருங்கடன், சமூகத் தணிக்கை மற்றும் பிற தலைப்பின் கீழ் உறைவிட புத்தாக்கப் பயிற்சி **3** நாட்களுக்கு பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**செலவின மதிப்பீடு:**

**5000** சமுதாய வள பயிற்றுநர் x ரூ.**1200** = ரூ.**60,00,000/–**

**4. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்துதல்:-**

2006–07 ஆம் ஆண்டு முதல் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினை வலுப்படுத்தும் வகையில் ஆதார நிதி வழங்குதல், சிறந்த கூட்டமைப்புகளுக்கு மணிமேகலை விருது மற்றும் கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கு பயிற்சி அளித்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. அரசு ஆணை எண்.125. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–3) துறை, நாள் 21.07.2008–ல் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அனைத்துத் தரப்பு மக்களையும் உள்ளடக்கி, ஜனநாயக முறையில் அனைவரின் பங்கேற்புடன் செயல்படும் வகையில் திருத்தி அமைக்க ஆணையிட்டுள்ளது.

இக்கூட்டமைப்புகள் சட்ட ரீதியான அங்கீகாரம் பெறவும், வங்கிகள் மூலம் எளிதாகக் கடன் பெறவும் வழிவகை செய்யும் வகையில் இக்கூட்டமைப்புகளை தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975ன் கீழ் பதிவு செய்ய அரசு உத்திரவிட்டுள்ளது. மாநிலத்தில் உள்ள அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளையும் வரும் மூன்று ஆண்டுகளில் தரமாக மறுசீரமைக்க செயல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. 2010–11ஆம் ஆண்டில் மொத்தம் 3,780 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மறுசீரமைக்கப்படவுள்ளது. 2010–11 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளில் மறுசீரமைக்கப்படும் 2,835 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் திறன் வளர்ப்புப் பயிற்சிக்குத் தகுதி பெறுகின்றன.

**4.1 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கான நிர்வாகப் பயிற்சி**

2010–11 ஆம் நிதியாண்டில், 2835 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு நிர்வாகப் பயிற்சி வழங்கப்பட உள்ளது. இப்பயிற்சியில் நிர்வாகம் சார்ந்த அதாவது, கூட்டமைப்பு அறிமுகம் மற்றும் விளக்கம், நிர்வாகிகளின் பொறுப்பு மற்றும் பணிகள், செயற்குழுவின் செயல்பாடுகள், கூட்டம் நடத்துதல், ஆண்டு அறிக்கை தயாரித்தல், ஆகியவைகள் குறித்து கற்றுத்தரப்படும். 2010–11ஆம் நிதியாண்டில் கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கான நிர்வாகப் பயிற்சிகளை ரூ.1,51,20,000/– (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்தோரு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் மூன்று நாட்கள் உறைவிடப் பயிற்சியாக நடத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**செலவின மதிப்பீடு:**

2835 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு x 4 நிர்வாகிகள்/ 30 =
378 அணிகள் x ரூ.40,000 = ரூ.1,51,20,000/–

**4.2 கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கான மேம்பட்ட நிதி மேலாண்மை பயிற்சி:**

2010–11 ஆம் நிதி ஆண்டில் கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கு மேம்பட்ட நிதி மேலாண்மை பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கு நிதி மேலாண்மை சம்பந்தமான இருப்புகளை அதாவது கணக்குப் பராமரித்தல், தணிக்கை, பெருங்கடன் மேலாண்மை, கடனை சரியான முறையில் உபயோகித்தல், வளங்களை சேகரித்தல், குறுங்காப்பீடு போன்றவற்றை வெளிப்படுத்தும். 2010–11 ஆம் நிதி ஆண்டிற்கு கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கான மேம்பட்ட நிதி மேலாண்மை பயிற்சியை ரூ.1,89,00,000/– (ரூபாய் ஒரு கோடியே என்பத்து ஒன்பது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் மூன்று நாட்கள் உறைவிடப் பயிற்சியாக நடத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**செலவின மதிப்பீடு:**

**2835** ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு x **4** நிர்வாகிகள்/ **30**
= **378** அணிகள் x ரூ. **50,000** = ரூ.**1,89,00,000/–**

### 4.3 குடியிருப்பு அளவிலான கூட்டமைப்புகள் நிர்வாகிகளுக்கான நிர்வாகப் பயிற்சி:

சுய உதவிக் குழுக்களுக்கான கூட்டமைப்புகள் இரண்டு நிலைகளில் குடியிருப்பு மற்றும் ஊராட்சி அளவில் அமைப்புகளைக் கொண்டு இயங்கும். தரமதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற குறைந்தது ஐந்து சுய உதவிக் குழுக்களிலிருந்து ஒரு உறுப்பினர் வீதம் பங்கேற்கும் வகையில் ஒவ்வொரு குடியிருப்பு மன்றமும் அமைந்திடும்.

சுய உதவிக் குழுக்களுக்கும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும் ஒரு முக்கிய இணைப்புப் பாலமாக குடியிருப்பு மன்றம் இருக்கும். மேலும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பானது சுய உதவிக் குழுக்களைக் கண்காணிக்க உதவுகிறது. புதியதாக உருவாக்கப்பட்ட குடியிருப்பு அளவிலான கூட்டமைப்பின் நிர்வாகிகள் அவர்களின் பொறுப்புகளை முறையாக அறிந்திருக்கவேண்டும். ஆகையால் குடியிருப்பு அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கான பயிற்சியானது ஊக்குநர் மற்றும் பிரதிநிதி மற்றும் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பயிற்சியைப்போல் கட்டாயப் பயிற்சியாக அறிமுகப்படுத்தப்பட வேண்டும். **2010–11** ஆம் நிதியாண்டில் குடியிருப்பு அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கு இரண்டு நாள் நிர்வாக பயிற்சி ரூ.**22,96,350/–** (ரூபாய் இருபத்து இரண்டு இலட்சத்து தொன்னூற்று ஆறாயிரத்து முன்னூற்று ஐம்பது மட்டும்) மதிப்பீட்டில் அளிக்க உதேசிக்கப்பட்டுள்ளது.

**செலவின மதிப்பீடு:**

**2835** ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு x **3** குடியிருப்பு மன்றங்கள் x **2** குடியிருப்பு மன்ற நிர்வாகிகள் x **2** நாட்கள் x ரூ. **67.50** = ரூ. **22,96,350/–**

### 4.4 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு தொழில் வாய்ப்புகளைக் கண்டறிதல் மற்றும் பட்டறிவுப் பயணப் பயிற்சி:

**2009–10** ஆம் ஆண்டில் **251** கூட்டமைப்புகள் பெருங்கடன் பெற்றுள்ளது. **2010–11** ஆம் ஆண்டில் மேலும் பல கூட்டமைப்புகள் பெருங்கடன் பெற உள்ளன. இக்கூட்டமைப்புகள் மற்றும் குழுக்களுக்கும் பொருளாதார செயல்பாடுகள் மற்றும் குழுத் தொழில் தொடங்குவதற்கு ஊக்கப்படுத்தப்பட வேண்டும். கூட்டமைப்பு / குழுக்கள் வழிநடத்தி சிறப்பாக செயல்பட்டு வரும் குறுந்தொழில்களை, பெருங்கடன் பெற்றுள்ள கூட்டமைப்புகள் பார்வையிடுவதால் தங்கள் தொழில் வாய்ப்புகளைக் கண்டறியப் பயனுள்ளதாக இருக்கும். இந்த பட்டறிவுப் பயணம் கூட்டமைப்பு உறுப்பினர்கள், மற்ற பகுதிகளில் சிறந்த செயல்பாடுகளைக் கற்றுக்கொள்வதற்கும், மேற்கொள்வதற்கும் உதவியாக இருக்கும். **2010–11** ஆம் நிதியாண்டில் கூட்டமைப்பு உறுப்பினர்களை தொழில்வாய்ப்பு கண்டறிவதற்கு மற்றும் பட்டறிவுப் பயணத்திற்கான பயிற்சியும் ரூ.**1,50,00,000/–** (ரூபாய் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**செலவின மதிப்பீடு:**

**1200** ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்கள் x **10** உறுப்பினர்கள்/**40**=
**300** அணிகள் x ரூ. **50,000**= ரூ.**1,50,00,000**

**4.5 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு – துணைக் குழு உறுப்பினர்களுக்கான புத்தறிவுப் பயிற்சி:**

மறுசீரமைக்கப்பட்ட ஒவ்வொரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் குழு அமைத்தல், கண்காணித்தல், நிதியிணைப்பு, வாழ்வாதாரம் மற்றும் சமூக பிரச்சனைகள் என நான்கு துணைக் குழுக்கள் உள்ளன. ஒவ்வொரு துணைக் குழுவிலும் உள்ள ஐந்து நபர்களில் இருவர் செயற்குழுவிலிருந்தும், மூவர் பொதுக்குழுவிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். செயற்குழு உறுப்பினர்களின் கடமை மற்றும் பொறுப்புகள் குறித்தான பயிற்சி, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு செயற்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சியின் போதே வழங்கப்படுகிறது. ஆனால் பொதுக் குழுவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மூன்று உறுப்பினர்களுக்கும், அவர்களது கடமை மற்றும் பொறுப்புகள் குறித்து பயிற்சி வழங்கப்பட வேண்டும். எனவே, 2010–11 ஆம் நிதியாண்டில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு துணைக்குழு உறுப்பினர்களுக்கு செறிவூட்டல் பயிற்சி ரூ.45,92,700/– (ரூபாய் நாற்பத்தி ஐந்து லட்சத்தி தொண்ணூற்று இரண்டாயிரத்து ஏழநூறு மட்டும்) மதிப்பீட்டில் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**செலவின மதிப்பீடு:**

2835 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு x 4 துணைக் குழுக்கள் x 3 உறுப்பினர்கள் x 2 நாட்கள் x ரூ. 67.50 = ரூ. 45,92,700/–

**4.6 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு – சமூகத் தணிக்கைகுழு உறுப்பினர்களுக்கான புத்தறிவுப் பயிற்சி:**

கூட்டமைப்பின் பொதுக்குழுவிலிருந்து ஐந்து உறுப்பினர்களை கொண்டு சமூகத் தணிக்கைகுழுவானது அனைத்து மறுசீரமைக்கப்பட்ட கூட்டமைப்புகளிலும், அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நிர்வாகம், சங்க விதிகள் மற்றும் நெறிமுறைகளின்படி செயல்படுகிறார்களா என உறுதி செய்வதற்கு சமூகத் தணிக்கை குழுவின் பங்கு முக்கியமாகிறது. சமூகத் தணிக்கைக் குழுவிற்கு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் செயல்பாடுகளை பற்றியும் அவர்களின் பணிகள் மற்றும் பொறுப்புகளை பற்றி பயிற்சி தேவைப்படுகிறது. 2010–11 ஆம் நிதியாண்டில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு – சமூகத் தணிக்கைக்குழு உறுப்பினர்களுக்கான செறிவூட்டல் பயிற்சிக்கான தொகையாக ரூ.19,13,625/– (ரூபாய் பத்தொன்பது இலட்சத்து பதிமூன்றாயிரத்து அறுநூற்று இருபத்தைந்து மட்டும்) மதிப்பீட்டில் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**செலவின மதிப்பீடு:**

2835 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு x 5 உறுப்பினர்கள் x 2 நாட்கள் x ரூ. 67.50 = ரூ. 19,13,625/–

**4.7 தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கான புத்தறிவுப் பயிற்சி:**

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை அவர்களது பகுதியிலேயே ஓர் தொண்டு நிறுவனமாகச் செயல்பட அங்கீகாரம் வழங்குகிறது. இந்த அங்கீகரிக்கப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் சுய உதவிக் குழுக்களை உருவாக்குதல் மற்றும் கண்காணித்தல், சுய உதவிக் குழுவினை ஒருங்கிணைத்தல், ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கான பயிற்சி, நிதி தரமதிப்பீட்டுக்கு உதவுதல், நிதி இணைப்பு மற்றும் பொருளாதார

தொழில் வளர்ச்சிக்கு சுய உதவிக் குழுக்களுக்கு ஆதரவு அளித்தல். சுய உதவிக் குழுக்களுக்கு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு வழிகாட்டியாக செயல்படவும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் நிர்வாகிகள் மற்றும் புத்தகப் பராமரிப்பாளர்களுக்கு போதுமான அறிவு மற்றும் பயிற்சிகள் தேவைப்படுகின்றன. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், இதுவரையில் 201 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை அங்கீகரித்துள்ளது. மேலும் 2010–11 ஆம் நிதியாண்டில், பல ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அங்கீகரிக்கப்பட உள்ளன.

2010–11 ஆம் நிதியாண்டில், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கானச் செறிவூட்டல் பயிற்சி ரூ.33,50,000/– (ரூபாய் முப்பத்திமூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**செலவின மதிப்பீடு:**

500 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் x 4 நிர்வாகிகள் / 30
= 67அணிகள் x ரூ.50,000/– = ரூ.33,50,000/–

**5. தகவல், கல்வி மற்றும் தொடர்பு சாதனங்கள் – பயிற்சிகையேடுகள் தயாரித்தல்:**

குடியிருப்பு மன்ற நிர்வாகிகளுக்கான நிர்வாகப்பயிற்சி கையேடு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு – துணைக் குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு – சமூக தணிக்கைக்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் நிர்வாகிகளுக்கான பயிற்சி, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு தொழில் வாய்ப்புகளை கண்டறிவதற்கான பயிற்சி ஆகிய அனைத்துப் பயிற்சிகளுக்கும் பயிற்சி கையேடுகள் தயாரிக்கப்பட்டு, அச்சடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி கையேடு மற்றும் உரிய நூல்கள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு/ குடியிருப்பு அளவிலான மன்ற நிர்வாகிகளுக்கு மட்டுமல்லாமல், திட்டப் பணியாளர்களுக்கும், மாவட்ட அளவிலான முதன்மை பயிற்றுநர்கள் மற்றும் சமுதாய வளப்பயிற்றுநர்களால் பயிற்றுவிக்க இப்பயிற்சி கையேடு மற்றும் இந்த நூல்கள் ஒரு சிறந்த கருவியாக அமையும்.

2010–11 ஆம் நிதியாண்டில் இப்பயிற்சி கையேடுகள் மற்றும் கைப்புத்தகங்கள் தயாரித்து, அச்சடித்து வெளியிட ரூ.50.00 (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) தேவைப்படும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**6. தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (டி.என்.வி.ஆர்.சி) :**

அரசு சார்ந்த, அரசு சாரா மற்றும் மக்கள் அமைப்புகளின் திறன்களை மேம்படுத்துவதற்காக, தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (டி.என்.வி.ஆர்.சி) 2001 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் உருவாக்கப்பட்டது, மேலும் டி.என்.வி.ஆர்.சி, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன திட்டங்களை ஆய்வு செய்தல் மற்றும் ஆவணப்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொண்டுவருகிறது.

**2010–11** ஆம் ஆண்டில் மாநில அளவில் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் தொகை ரூ.**3,000** கோடியும், மேலும் கூட்டமைப்புகளுக்கு பெருங்கடன் வழங்கவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கை அடைவதற்கு வங்கியாளர்கள், வட்டார அளவிலான பணியாளர்கள், மாவட்ட அளவிலான முதன்மை பயிற்றுநர்கள், தொண்டு நிறுவன ஒருங்கிணைப்பாளர்கள், சமுதாய வளப்பயிற்றுநர்கள் மற்றும் கூட்டமைப்புகளின் நிர்வாகிகளுக்கு பயிற்சி அளித்தல் அவசியமாகிறது ஆதலால் டி.என்.வி.ஆர்.சி மேற்கூறிய நோக்கங்களை அடைவதற்கு கீழ்க்காணும் தொடர் பயிற்சிகளை நடத்திட உத்தேசித்துள்ளது. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன திட்டங்களை ஆய்வு செய்தல் மற்றும் ஆவணப்படுத்துதல் ஆகிய பணிகளை டி.என்.வி.ஆர்.சி மேற்கொள்ளும்.

| வ. எண் | தலைப்பு | பயிற்சிக்கான எண்ணிக்கை | மொத்த தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | திட்டத்திற்கான தொகை (தொண்டு நிறுவனம், வங்கியாளர்கள் மாவட்ட அளவிலான முதன்மை பயிற்றுநர்களுக்கான பயிற்சி மற்றும் ஆய்வு மற்றும் பிற | **54** | **31,20,700** |
| 2 | நிர்வாக மற்றும் பணியாளர்களுக்கான தொகை | | **8,82,000** |
| | மொத்தம் | | **40,02,700 (அ) 40,00,000** |

**2010–11** ஆம் நிதி ஆண்டில் டி.என்.வி.ஆர்.சி பயிற்சி, மற்றும் நிர்வாக பணியாளர்களுக்கான செலவினம் ஆகியவற்றிற்கு ரூ.**40,00,000/–** (ரூபாய் நாற்பது இலட்சம் மட்டும்) தேவைப்படும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**7. திட்ட மேலாண்மை அலகு, திட்ட செயலாக்க அலகு மற்றும் வட்டார அளவிலான பணியாளர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி அளித்தல்.**

மகளிர் திட்ட வட்டார அளவிலான பணியாளர்களுக்கு கடன் இணைப்பு, தர மதிப்பீடு மற்றும் ஊரக வளர்ச்சி அளவிலான கூட்டமைப்பை வலுபடுத்துதல் போன்ற பயிற்சியினை வழங்க அவசியமாகிறது. புதியதாக திறந்த வெளி முறையில் தேர்வு செய்யப்பட்ட உதவி திட்ட அலுவலர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி அளிப்பது அவசியமாகிறது.

**2010–11** ஆம் நிதி ஆண்டில் மாநிலம் / மாவட்டம் / வட்டார அளவிலான மகளிர் திட்ட பணியாளர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி ரூ.**50,00,000/–** (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**4.** தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர், மேலே பத்தி **2–3–**ல் விவரிக்கப்பட்ட அனைத்துப் பயிற்சிகளையும் அளித்திட ரூ.**56.27** கோடி வழங்கிட அரசு அனுமதி அளிக்குமாறும், மேலும் இதில் **2010–11**ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.**53.89** கோடியை விடுவிக்குமாறும், கூடுதல் தொகையான ரூ.**2.38** கோடியை தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் சேமிப்பிலிருந்து பயன்படுத்திக் கொள்ளவும் அனுமதி அளிக்குமாறும் மற்றும் மகளிர் திட்டத்தில் குழு ஒருங்கிணைத்தல், பயிற்சி மற்றும் கடன் இணைப்பு ஆகியவை ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்றும் அவை ஒரே நேரத்தில் செயல்படுத்தப்பட வேண்டியுள்ளதால் காலாண்டு முறைப்படி ஒதுக்கீடு செய்து வழங்கப்படும் தொகையை பயன்படுத்துவதில் காலதாமதம் ஏற்படுவதினால் திட்ட செயலாக்கத்தில் பாதிப்பு

ஏற்படுமென்பதால், அரசு காலண்டு முறைப்படி ஒதுக்கீடு செய்து நிதி வழங்குவதில் இருந்து விலக்களிக்குமாறும், அரசு முதன்மைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அவர்கள், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் அவர்களுடன் கலந்தாலோசித்து வழிகாட்டு நெறிமுறைகளை அவ்வப்போது நடைமுறையின் தேவைக்கு ஏற்றவாறு உரிய மாற்றம் செய்ய அதிகாரம் வழங்குமாறும், இத்தொகையினை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் பெற்று காசோலையாக தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திற்கு அளிக்குமாறும் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

**5.** மேலே பத்தி 4–ல் கண்டுள்ள தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரது கருத்துருவினை அரசு மிகவும் கவனமுடன் பரிசீலித்து **2010–11**ஆம் ஆண்டிற்கான திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் இளைஞர் திறன் வளர்த்தல் பயிற்சி மற்றும் பத்தி **3**–ல் குறிப்பிட்டுள்ள இதர பயிற்சிகளுக்கான தொகை ரூ.**56.27** கோடி (ரூபாய் ஐம்பத்தி ஆறு கோடியே இருபத்தி ஏழு இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்தும், **2010–2011** ஆம் நிதியாண்டில் வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.**53.89** கோடியில் **50** சதவீதமான ரூ.**26.94** (ரூபாய் இருபத்தாறு கோடியே தொன்னூற்று நான்கு இலட்சம் மட்டும்) விடுவித்தும், அத்தொகையை காலாண்டு முறைப்படி நிதி ஒதுக்கீடு செய்வதில் இருந்து விலக்களித்தும், மேலும் ரூ.**2.38** கோடியை தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன சேமிப்பு நிதியிலிருந்து பயன்படுத்திக் கொள்ள அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது .

**6.** மேலே பத்தி **5**–ல் விடுவிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்கண்ட கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

| | |
|---|---|
| “ **2235** – சமூக பாதுகாப்பும், நலனும் – **02** சமூக நலன் – **103** மகளிர் நலன் – பதினொன்றாம் ஐந்தாண்டின் திட்டப்பணிகள் II. மாநிலத்திட்டம் – LR சுய உதவிக் குழுக்களுக்குப் பயிற்சி அளித்தல் – **09** உதவித் தொகை – **03** குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (DPC **2235 02 103** LR **0937**) “ | ரூ. **12,71,08,500** |
| “ **2235** – சமூக பாதுகாப்பும், நலனும் – **02** சமூக நலன் **789** ஆதி திராவிடருக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் பதினொன்றாம் ஐந்தாண்டின் திட்டப்பணிகள் – II மாநிலத் திட்டம் – JE சிறப்புக் கூறுகள் திட்டத்தின் கீழ் சுய உதவிக் குழுக்களுக்குப் பயிற்சி அளித்தல் – **09** உதவிக் தொகை – **03** குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை (DPC **2235 789** JE **0933**) “ | ரூ. **4,23,69,500** |
| “**2235** – சமூக பாதுகாப்பும், நலனும் – **02** சமூக நலன் – **200** ஏனைய திட்டங்கள் – பதினொன்றாம் ஐந்தாண்டின் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – இளைஞர்களுக்கான சுய உதவிக் குழுக்களுக்கு உதவி – **09** உதவித்தொகை – **03** குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவிக் தொகை (DPC **2235 02 200** JB **0935**) “ | ரூ.**7,50,00,000** |
| “ **2235** – சமூக பாதுகாப்பும், நலனும் – **02** சமூக நலன் – **789** ஆதி திராவிடருக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் – பதினொன்றாம் ஐந்தாண்டின் திட்டப்பணிகள் – II மாநிலத் திட்டம். JG சிறப்புக் கூறுகள் திட்டத்தின் கீழ் இளைஞர்களுக்கான சுய உதவிக் குழுக்களுக்கு உதவி – **09** உதவிக் தொகை – **03** குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவிக் தொகை (DPC **2235 02 789** JG **0939**) “ | ரூ. **2,50,00,000** |
| **மொத்தம்** | **ரூ..26,94,78,000** |

7. மேலே பத்தி 5–ல் விடுவிக்கப்பட்ட ரூ.26.94 கோடியை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் பெற்று தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திற்கு காசோலையாக வழங்க அதிகாரம் அளிக்கப்படுகிறது. இதற்கான பயன்பாட்டுச் சான்றிதழை மாநிலக் கணக்காயர் / ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் அரசிற்கு வழங்குமாறு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. அரசு முதன்மைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்கள், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் அவர்களுடன் கலந்தாலோசித்து வரைமுறைகளில் அவ்வப்போது நடைமுறையின் தேவைக்கு ஏற்றவாறு மாற்றம் செய்வதற்கு இதன் மூலம் அதிகாரம் வழங்கப்படுகிறது.

9. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.336/செயலர் (செலவினம்)/10, நாள் 14.05.2010–ல் பெற்ற இசைவின்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

மேலாண்மை இயக்குநர், ன்
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், சென்னை –32.
ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை –15.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், ()
அனைத்து திட்ட அலுவலர்கள், ()
(மகளிர் திட்டம்) ()
(மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மூலமாக)
மாநிலக் கணக்காயர், சென்னை 18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை 35.

<u>நகல்:</u>–
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை 9.
நிதி (ஊரக வளர்ச்சி)த்துறை, சென்னை 9.
அரசு முதன்மைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்
துறையின் தனிச் செயலர், சென்னை 9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (வரவு (ம) செலவு)துறை, சென்னை 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.